**இலங்கை குதோ சங்கம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை குதோ சங்கத்தின் (''சங்கம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமான செலவுக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 350,800 பெறுமதியான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட போதிலும் அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் முறையாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் அதிகமாக ஒதுக்கப்பட்ட கணக்காய்வு கட்டணமான ரூபா 9000 ஆனது முன்னைய ஆண்டு சீராக்கமாக திரட்டப்பட்ட மிகைக்கு சீராக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்கான செலவில் செலவு வைக்கப்பட்டுள்ளது. எனவே, மீளாய்வாண்டிற்கான செலவுகள் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. | 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 39,955 ஆன பற்றாக்குறையாக இருந்ததடன் அதற்கு முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 40,615 ஆகும். சங்கத்தின் நடைமுறை பொறுப்புகள் அதன் நடைமுறை சொத்துக்களை விட ரூபா 96,754 ஆல் விஞ்சப்பட்டிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்கள் அதன் மொத்தச் சொத்தக்களை விட ரூபா 81,254 ஆல் விஞ்சப்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வாண்டில் சங்கத்தின் | சங்கத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | சங்கத்தின திறன் குறித்த குறிப்பிடத்தக்க சந்தேகத்தைத் தணிக்கும் திட்டங்களைச் செயல்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக வெளிப்படுத்த |

| | | |
|---|---|---|
| மொத்த சொத்துக்களுடன் ஒப்பிடுகையில், திரட்டப்பட்ட நிதியத்தின் எதிர்மறை மிதி 5 மடங்கு ஆகும். இது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருப்பதையும் அது சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதையும் குறிக்கிறது. இருப்பினும், நிர்வாகக் குழு பரிகார நடவடிக்கைகளை எடுப்பதற்காக இநநிலைமையைக் கருத்தில் கொள்ளவில்லை என்பதுடன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை | | லொன்றை கொண்டிருக்க வேண்டும். |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 39,955 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 40,615 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 660 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த செலவகள் ரூபா 23,360 ஆல் குறைவடைந்தமை இம்முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

**3.** **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1** **செயற்பாட்டு செயற்திறனின்மை**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முந்தைய ஆண்டில் உள்ளூர் மற்றும் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெயர் மாற்றப்படும் வரை உள்ளூர் மற்றும் சர்வதேச நிகழ்வுகள் எதனையும் நாங்கள் ஏற்பாடு செய்ய மாட்டோம் என விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளோம் | விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |